25th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

இந்த ஆண்டின் இறுதித் துணை மதிப்பீடுகளை ஏற்றுக்கொள்ளும்படி இச் சபையைக் கேட்டுக்கொண்டு என் சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

IV.—ANNOUNCEMENT.

FINAL SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1962–63.

MR. SPEAKER : Under Rule 159 (2) of the Madras Legislative Assembly Rules, I have waived the time-limit and have allotted two hours on the 27th March 1963 for discussion on the Final Supplementary Statement of Expenditure for 1962–63 and one hour on the 28th March 1963 for voting on the Demands for Grants for Supplementary Expenditure.

V.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1963–64—*cont.*

DEMAND NO. I—LAND REVENUE DEPARTMENT.

DEMAND NO. IX—DISTRICT ADMINISTRATION AND MISCELLANEOUS.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 88,18,100 under Demand No. I—Land Revenue Department.'

Sir, on the recommendation of the Governor, I also move—

'That the Government be granted a sum not exceeding Rs. 5,31,42,500 under Demand No. IX—District Administration and Miscellaneous.'

SRI S. MADHAVAN : Sir, I move—

'That the allotment of Rs. 88,18,100 under Demand No. I—Land Revenue Repartment, be reduced by Rs. 100.'

SRI P. MURUGAIYAN : Sir, I move—

'That the allotment of Rs. 5,31,42,500 under Demand No. IX—District Administration and Miscellaneous be reduced by Rs. 100.'

MR. SPEAKER : The Demands and the cut-motions are before the House for discussion.

* **திரு. எஸ். மாதவன் :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த வருமானத்துறை மானியத்தின் மீது நான் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக நிலத்தின் மீது சுமத்தப்படக்கூடிய சுமை குறைக்கப்படவேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய கொள்கையாக இருந்து கொண்டிருக்கிறது. சுதந்திரத்திற்குப் முன்னால் அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முன்னாலே கூட 1936-ம் ஆண்டு பம்பாயில் கூடிய காங்கிரஸ் கமிட்டி இது போன்ற தீர்மானத்தை இயற்றி அதை அடிப்படையாக வைத்துக்கொண்டு, 1937-லே தேர்தலிலே ஈடுபட்டபோது, தங்களுடைய தேர்தல் அறிக்கையில் நிலத்தின் மீது சுமத்தப்பட்ட சுமை குறைக்கப்படவேண்டுமென்ற கருத்தை காங்கிரஸ் கட்சி வலியுறுத்தி வந்திருக்கிறது. அப்படி இருந்த போதிலும் இன்றைக்கு ஆட்சிக்கு வந்த